# ஆமை பிடிப்போர்

சிந்தனை விருந்து - 2

ஒரு காட்டில் ஒரு வேடன் தன் மனைவியோடும் இரு குழந்தைகளினுடனும் வாழ்ந்து வந்தான். அவன் காட்டு மிருகங்களை வேட்டையாடித் தன் குடும்பத்தோடு பங்கிட்டு உண்பான். சில நாட்களிற் தன் குடிசைக்கு அருகாமையில் உள்ள குளத்தில் மீன் இரண்டைப் பிடித்தும் நாலு பேருமாகச் சாப்பிடுவார்கள்.

ஒருமுறை அக்குளத்தில் ஆமைகள் இருப்பதைக் கண்டு; இரண்டு ஆமைகளைப் பிடிக்க முயன்றான். அவனோ படிப்பறிவும் ஆராய்ச்சி அறிவும் இல்லாதவன். ஒரு ஆமையைப் பிடித்துக் கரையில் வைத்துவிட்டுப் பின் மற்ற ஆமையைப் பிடிக்கப் போகையில்; முதல் ஆமை மறுபடியும் ஊர்ந்து தண்ணிக்குட் சென்றுவிடும். இப்படிப் பலதடவை கரையிற் போட்ட ஆமைகள் திரும்பவும் குளத்துட் சென்றன. அவன் ஒரு ஆமையைக் காலுக்குள் அமுக்கிக்கொண்டு மற்ற ஆமையைப் பிடிக்கப் போக அதுவும் சறுக்கிக்கொண்டு சென்றுவிட்டது.

கடைசியில்; "கடவுளே; இன்று என் குடும்பத்தோடு ஆமை இறைச்சியை ருசித்து உண்டு உவக்கும் வாய்ப்பு இல்லையே" என்று சலித்துக் குந்திக் கும்பிட்டபடி இருந்தான்.

அதே நேரத்திற் காத்திராப்பிரகாரமாக; அக்குளக்கரை ஓரமாக உள்ள நடை பாதையிற் சென்று கொண்டிருந்த தருமன் என்ற ஒரு பண்டிதர்; வேடுவன் படும் கஷ்டங்களைக் கவனித்தார். தருமனோ தன் ஊரில் இருந்து இக்காட்டு வழியாகச் சென்று அப்பால் உள்ள கிராமத்திற் தன் தம்பிக்குச் சம்மந்தம் பேசப் போய்கொண்டிருந்தவர். கற்காத கபடம் இல்லாக் காட்டு மனிதனின் அறியாமையைக் கண்டு இரங்கி; அவன் முயற்சியையும் இறை பக்தியையும் மெச்சி; அவனை நோக்கி; "ஆமை பிடிப்போர் மல்லாத்துவர்" என்று; தன் இரு கைகளாலும் ஆமையைப் பிரட்டிப் போடு என்று சைகை செய்து விளக்கினார்.

வாழும் வேடக்கை கொண்ட வேடுவனும் ஒரு ஆமையைப் பிடித்து மல்லாத்திப் பிருட்டிக் கரையிற் போட்டான். அது

பிரண்டு ஊர முடியாமல் அப்படியே இருந்தது. அவன் இன்னும் ஒரு ஆமையையும் பிடித்துக்கொண்டு போய் மனைவி மக்களுடன் பங்கிட்டுப் புசித்து இன்புற்றான்.

இங்கு பல வினாக்கள். அவற்றுட் தலையாய கேள்வி:

தருமன் செய்தது தர்மமா? அதர்மமா? - சரியா? பிழையா? - பாபமா? புண்ணியமா?

கேட்டுப்பாருங்கள் ! விடையளித்துப் பாருங்கள் ! !

தொகுப்பு : தனா